

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த, பொருளாளர் எல்.கே.சுதீஷ், பாண்டிச்சேரி ராமச்சந்திரா மருத்துவமனை சேர்மன் ராதா ராமச்சந்திரன் ஆகியோரின் தாயாருமான, கே.அம்சவேணி (83) நேற்று முன்தினம் (07.10.2025) காலை வயது மூப்பின் காரணமாக மறைவெய்தினார். இந்நிலையில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, சாலிகிராமத்தில் உள்ள இல்லத்திற்கு நேரில் சென்று பிரேமலதா விஜயகாந்தின் தாயார் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் , இலங்கை தமிழர்களுக்கு அருப்புக்கோட்டை வட்டம் குல்லூர்சந்தை , காரியாபட்டி வட்டம் மல்லாங்கிணறு மற்றும் வெம்பக்கோட்டை வட்டம் கண்டியாபுரம் ஆகிய இடங்களில் மொத்தம் ரூ .27.41 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 408 குடியிருப்புகளை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் . அதனைத்தொடர்ந்து , மல்லாங்கிணறு இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் ரூ .2.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 40 குடியிருப்புகளுக்கான சாவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராஜேந்திரன் தலைமையில், அமைச்சர் தங்கம் தென்னரசு பயனாளிகளுக்கு வழங்கினார் . உடன் நகரச் செயலாளர் காரியாபட்டி செந்தில், ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் தங்கத் தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், வீரத்தாய் குயிலி அவர்களின் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சூரக்குளத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள வீரத்தாய் குயிலி அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் நினைவுத்தூணிற்கு 2.10.2025 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி மற்றும் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தோர், முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ஜி.அரியூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது, இதில் ஒன்றியக்குழு தலைவர் அஞ்சலாட்சி அரசகுமார், ஒன்றிய செயலாளர் எம்.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு 13 அரங்குகளை பார்வையிட்டு முகாமினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றனர், மேலும் இம்முகாமில் ஒன்றிய துணைச் செயலாளர் தணிகாசலம், முத்துவேல்,ஒன்றிய பொருளாளர் காமராஜ், கே.ஆர்.பி பிரகாஷ், வருவாய் வட்டாட்சியர்கள் இராமகிருஷ்ணன், கண்ணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மேட்டூரில் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள்!

*சேலம், அக்.9-*

*சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என். பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகளை அடிக்கல் நாட்டி வைத்தார்.*

*சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என். பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டி வைத்தார்.*

*இவ்விழாவில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*



புதூர் ஊராட்சி ஒன்றியம், மேலக்கல்லூரணி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.55லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை ரூ.6 கோடியே 33 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 33 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-10-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பி.ராமசாமி, எ.பாதர்பேட்டை அஞ்சல், துறையூர் தாலுக்கா, திருச்சி | 25,000/–– |
| 2. | வி.பிரபு, லட்சுமிபுரம், கத்தாயம்பட்டு அஞ்சல், வேலூர் – 632 312 | 25,000/– |
| 3. | எஸ்.வேதரெத்தினம், மடப்புரம், தீவம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் மாவட்டம் | 25,000/– |
| 4. | பி. பெருமாள், மேலப்பொன்னகரம் 5வது தெரு, கரிமேடு, மதுரை | 25,000/– |
| 5. | எஸ்.எம்.பரமசிவம், காந்தி நகர், ஜக்கமநாயக்கன்பட்டி, போடி, தேனி மாவட்டம் | 25,000/– |
| 6. | வி.சுப்பிரமணி, 10வது வார்டு, ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாலசமுத்திரம் | 25,000/– |
| 7. | பி.ஆண்டி, வட்டான்வலசை, செம்பிடையார்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 8. | அ.செல்வம், நேருஜி தெரு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் இம்மாதம் தென்காசி மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கு வதற்காக வருகை தர இருப்பதை முன்னிட்டு நிகழ்ச்சி நடைபெறுவதற்கான இடத்தை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் உள்பட பலர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (7.10.2025) அழகப்பா பல்கலைக்கழக வளாக வீறுகவியரசர் முடியரசனார் அரங்கத்தில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ் பண்பாட்டு மையம் நுண்கலைத்துறை மற்றும் வீறுகவியரசர் முடியரசனார் அவைகளம் ஆகியவைகள் இணைந்து நடத்திய வீறுகவியரசர் முடியரசனார் வெள்ளணி விழாவில், வீறுகவியரசர் விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் , காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா.மாங்குடி , காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் குணசேகரன் , அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் மதிப்புறு கர்னல் பேரா. க.இரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புரவலர் கவிச்சுடர் கவிதைப்பித்தன அவர்கள், வீறுகவியரசர் முடியரசனார் அவைக்கள செயலாளர் முனைவர் தமிழ் முடியரசன் , இணைச்செயலாளர் முனைவர் இரா.வனிதா , ஏ.சி.என். கல்வி தொண்டு அறக்கட்டளை தலைவர் அரிமா டாக்டர் நா.சந்திரபாபு , நுண்கலைத்துறை தலைவர் மூத்த பேரா. சே.செந்தமிழ்ப்பாவை , தொழிலாளுனர் ஆசிரியர் சா.இராமன், மருத்துவர் அமலன் , கணினிப் பொறிஞர் இராம.பழனியப்பன் , முதல்வர் (ப.நி) சேவுகன் அண்ணாமலை கல்லூரி பேரா.இரெ.சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.